தமிழ்நாடு அரசு – நகர் ஊரமைப்பு துறை

**துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம்,**

**ஒசூர் அவர்களின் நடவடிக்கைகள்**

பிறப்பிப்பவர்: **திரு.ரா.கிருஷ்ணமூர்த்தி,பி,இ.**

ந.க.எண். **1538/2019/ஒபுநவகு** நாள்: **06.07.2020.**

பொருள் : **TNHB** – அண்டை குடியிருப்புக் திட்டம் - ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் - ஒசூர் வட்டம் - ஒசூர் மாநகராட்சி - தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - ஒசூர் அண்டை குடியிருப்பு திட்டம் எண். 03, ஒசூர் கிராமம், சர்வே எண்கள் 539/1pt, 2pt, 3pt, 4pt ஆகியவற்றில் அமையவுள்ள Stilt + 5 தளங்களுடன் கூடிய, 20 MIG Flats கட்டுமானத்திற்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49-ன்கீழ் திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. மனுதாரர் செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ஓசூர் வீட்டுவசதி பிரிவு, கடிதம் எண்.P1/2950/2019, நாள்: 21.10.2019.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்: 17.02.2020. (நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு முகவரியிட்டது)
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3934/202/TCP-7, நாள் 23.05.2020
4. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்: 01.06.2020.
5. மனுதாரர் செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ஓசூர் வீட்டுவசதி பிரிவு, ஆவர்களின் கடிதம் நாள்: 05.06.2020.
6. ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 119-வது குழும கூட்டம் தீர்மானம் எண்: 02 நாள்: 03.07.2020.
7. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள். 04.02.2019

*****

**உத்தரவு:**

ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் - ஒசூர் வட்டம் - ஒசூர் மாநகராட்சி - தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - ஒசூர் அண்டை குடியிருப்பு திட்டம் எண். 03, ஒசூர் கிராமம், சர்வே எண்கள் 539/1pt, 2pt, 3pt, 4pt ஆகியவற்றில் ஆமையவுள்ள Stilt + 5 தளங்களுடன் கூடிய, 20 MIG Flats கட்டுமானம் அமையும் மனைக்கு 'ABCDE' என எல்லையிட்டு ம.வ./ஒ.பு.ந.வ.கு.எண். **11/2020** என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

கீழ்கண்ட விவரங்களுடன் உத்தேசம் அமைகிறது.

<u>மனையின் பரப்பு</u>

| | | |
|---|---|---|
| Site Area | - | 849.65 Sq.m |

<u>உத்தேச கட்டுமான விபரம்:</u>

| | | | | |
|---|---|---|---|---|
| Stilt Floor | - | 323.04 Sq.m | - | வாகனநிறுத்துமிடம் |
| First Floor | - | 323.04 Sq.m | - | 4 குடியிருப்புகள் |
| Second Floor | - | 323.04 Sq.m | - | 4 குடியிருப்புகள் |
| Third Floor | - | 323.04 Sq.m | - | 4 குடியிருப்புகள் |
| Fourth Floor | - | 323.04 Sq.m | - | 4 குடியிருப்புகள் |
| Fifth Floor | - | 323.04 Sq.m | - | 4 குடியிருப்புகள் |
| மொத்த கட்டுமான பரப்பு | - | **1938.24 Sq.m** | | |
| **FSI Area** | - | **1615.20 Sq.m** | | |

பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதத்தில் பாகலூர் – ஒசூர் செல்லும் பிரதான சாலையை அணுகுசாலையாக கருத்தில்கொண்டு ஒப்புதல் வழங்குமாறு தெளிவுரை வழங்கப்பட்டதனையடுத்து பார்வை 6-ல் கண்டுள்ள ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 119-வது குழும கூட்டம் தீர்மானம் எண். 02 நாள்: 03.07.2020 ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டதனை தொடர்ந்து மேற்கண்ட விவரங்களுடன் Stilt + 5 தளங்களுடன் கூடிய 20 MIG Flats குடியிருப்பு கட்டுமானத்திற்கு தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதி 2019 மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் திட்ட அனுமதி வழங்கும் பொருட்டு கட்டிட வரைபடங்களுக்கு திட்ட அனுமதி **க.வ/தி.அ/ஒ.பு.ந.வ.கு எண். 7A, 7B, 7C/2020** என எண்ணிடப்பட்டு 06.07.2020 முதல் 05.07.2025 வரை 5 வருடங்களுக்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1) Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and do not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

2) நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளவேண்டும். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல

3) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations

4) மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்

5) The provisions in the G.O.(Ms) No.17, Housing and Urban Development (UD4(3)) Department dated:05.02.2016 relating to installation and use of solar energy system should be followed:

6) The conditions given in the Fire Department NOC should be followed.

7) This order is passed subject to the outcome of the Writ petition WP (MD) No: 8998/2019.

8) "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".

<u>நிபந்தனைகள்:</u>

1) உத்தேச குடியிருப்பு கட்டிட கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்:138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

8) உத்தேச கட்டிடமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) [illegible] எண் [illegible] மற்றும் குடிநீர் வழங்கல் [illegible] துறை [illegible] [illegible] செய்திடக் [illegible] "U" Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டிடமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவரும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

ஆணையாளர், ஓசூர் மாநகராட்சி, ஓசூர் அவர்கள் மேற்கொண்டு உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவுக்காக ஆணையாளர், ஓசூர் மாநகராட்சி, ஓசூர் அவர்களை அணுகுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை அனுப்புமாறு ஆணையாளர், ஓசூர் மாநகராட்சி, ஓசூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

துணை இயக்குநர் உறுப்பினர் செயலர்(பொ)
ஓசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம்,
ஓசூர்.
6/7/20

பெறுநர்

1) ஆணையாளர்,
ஓசூர் மாநகராட்சி,
ஓசூர்.

**இணைப்பு** - திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு.

2) The Executive Engineer & Admin. Officer,
Tamil Nadu Housing Board,
Hosur Housing Unit,
Bagalur Road,
Hosur – 635 109.
} உத்தரவு கடிதம் மட்டும்

# ஓசூர் மாநகராட்சி
## கட்டிட அனுமதி உத்தரவு

57

நாள் :07/08/2020

க.வி.எண்:153/CP/20-21/0004081 உ.ஆணை:153/BL/2020/00462

பி.ஏ எண்:153/BPA/2020/00747

பொருள்: கட்டிட அனுமதி ஓசூர் மாநகராட்சி, கிராமம்., நகரளவு எண்: 539, தொகுதி: 0, பகுதி: 0, கதவு/மனை எண்:0 கட்டிட அனுமதி வழங்கி உத்தரவிடுதல்
பார்வை : செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ஓசூர என்பவரது 01-Aug-2020 ம் தேதிய விண்ணப்பம்.
மனையின் பரப்பளவு-9146.000 சதுர அடி

| S.No | Build Floor Name | UsageName | BuildupSqft |
|---|---|---|---|
| 1 | Stilt Floor | RESIDENTIAL | 3523.900 |
| 2 | First Floor | RESIDENTIAL | 3475.910 |
| 3 | Second Floor | RESIDENTIAL | 3475.910 |
| 4 | Third Floor | RESIDENTIAL | 3475.910 |
| 5 | Fourth Floor | RESIDENTIAL | 3475.910 |
| 6 | Fivth Floor | RESIDENTIAL | 3475.910 |
| | | **Total Sqft** | **20903.450** |

FA / p/g Ground to 5th A/E 10/8/2020

செலுத்தப்பட்ட கட்டணங்களின் விவரம் பின்வருமாறு

| S.No | கட்டணம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | விளம்பரப்பலகை வைப்பு | 10000.00 |
| 2 | மழை நீர் சேகரிப்பு முன் வைப்புத் தொகை | 25000.00 |
| 3 | கட்டிடம் கழிவுகளை அகற்றுதல் | 35000.00 |
| 4 | கட்டிட உரிமையாணைக் கட்டணம் | 129500.00 |
| | **Total Amount** | **199500.00** |

| Receipt No | Receipt Date | Amount | Payment Mode |
|---|---|---|---|
| 153/01/3/20-21/0000738 | 07/Aug/2020 | 199500.00 | DD |

| Fees Description | DD/Challan No | DD/Challan Date | Amount |
|---|---|---|---|
| Labour welfare fund | 530601010038239 | 07/Aug/2020 | 0.00 |

உத்தரவு :

2008-ம் ஆண்டின் ஓசூர் மாநகராட்சி சட்டம் 275, 276-வது பிரிவின் கீழ் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமம்:,கதவு/மனை எண்:0, டி.என்;.எச்.பி. ஹட்கோ-பாகலூர் அட்கோ, BAGALUR ROAD, HOSUR , தொகுதி: 0, பகுதி: 0,நகரளவு எண்: 539, உள்ள இடத்தை அங்கீகரித்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாறுதல் கட்டிடம்/ கூடுதல் கட்டிடம்/ புதுப்பித்து கட்டிக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் ஒரு தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கட்டிடம் கட்ட குறித்த இடத்தில் கட்டிடத்தை வரைபடத்தில் வரைந்துள்ளபடி/ திருத்தப்பட்டபடி கீழ்கண்ட கட்டுபாடுகளுக்கு 07/08/2020 தேதியில் இருந்து 06/08/2025 தேதிக்குள் கட்டிக்கொள்ள உரிமை ஆணை வழங்கப்படுகிறது.

பெறுபவர்,

செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி
வாரியம், ஓசூர
539/1PT 2PT,டி.என்;.எச்.பி. ஹட்கோ-பாகலூர்
அட்கோ, BAGALUR ROAD, HOSUR

ஆணையாளர்
ஓசூர் மாநகராட்சி
HOSUR,
7/8

நகல் : இளம் / உதவி பொறியாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை தெரிவிக்க
நகல் : வருவாய் உதவியாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்திற்கு வரிவிதித்து வரிவிதிப்பு எண்ணை தெரிவிக்க
நகல் : வருவாய் பிரிவு எழுத்தர்.

CONDITIONS / நிபந்தனைகள்

| S.No. | Condition Name |
|---|---|
| 1 | இந்த அனுமதி 5 வருட காலத்திற்கு மட்டும் அமுலில் இருக்கும். இந்த கால அளவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லையானால் புதியதாக மனு செய்து உரிமக் கட்டணம் செலுத்தி அனுமதி பெறப்படவேண்டும். |
| 2 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி கட்டிடம் கட்டப்பட வேண்டும். |
| 3 | ஆணையாளரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி பெறாமல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து எந்தவிதமான மாறுதலும் செய்யக் கூடாது. |
| 4 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை கட்டிட வேலைகள் நடக்கும் இடத்தில் வைத்திருந்து நகராட்சி/மாநகராட்சி ஆய்வு அலுவலர்கள் கேட்கும் போது காண்பிக்கப்பட வேண்டும். |
| 5 | பொதுத் தெருவை ஒட்டிக் கட்டப்படும் மதில் சுவர்களின் உயரம், தெரு மட்டத்திலிருந்து 5/8 அடிக்கு மேற்படக் கூடாது. கதவுகள் தெருப் பக்கம் திறக்கப்படக் கூடாது. தெருக்களின் சந்திப்பிலுள்ள முனைகள் வளைவுபடுத்த வேண்டும். |
| 6 | சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது. மனுதாரரின் மனைக்கு செல்வதற்காக கட்டப்படும் படிகள் அவர்கள் சொந்த இடத்திலேயே கட்டப்பட வேண்டும். |
| 7 | அரசு அல்லது நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்தல் கூடாது. |
| 8 | அரசாணை எண் 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1) துறை நாள் 03.11.2004ன்படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைக்கப்பட வேண்டும். |
| 9 | கிணற்றை சுற்றிலும் 3 அடி உயரத்திற்கு குறையாமல் கைப்பிடிச் சுவர் கட்டப்படுவதுடன் கிணற்றை சுற்றி தளவரிசை கட்டப்பட வேண்டும். |
| 10 | ஜன்னல்களின் அளவுகள் அதன் பிரேம்கள் நீங்கலாக இருக்க வேண்டும். |
| 11 | கழிவுநீரைப் வெளிப்படுத்த தேவையான வடிகால் வசதிகள் கட்டப்படுவதுடன் தண்ணீர் தங்காமல் தடுக்கப்பட வேண்டும். |
| 12 | சமையலறையில் புகையினை வெளியேற்றும் விசிறி (Exhaust Fan) அமைக்கப்பட வேண்டும். |
| 13 | நகராட்சி/மாநகராட்சி துப்புரவு அலுவலர்/ஆய்வரிடமிருந்து துப்புரவு சான்றிதழ் பெறுமுன்னர் கட்டிடத்தை பயன்படுத்துதல் கூடாது. |
| 14 | கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி அல்லது கட்டிடம் பயன்படுத்துகிற தேதி ஆகியவற்றில் எது முன்கூட்டி நடந்ததோ அந்த தேதியை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட அல்லது கட்டிடம் பயன்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் முடிக்கப்பட்ட கட்டிடத்தின் இரண்டு வரைபடங்களுடன் நிர்வாக அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும். |
| 15 | மழைநீர் சேகரிப்பு திட்டம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை (நிலை) எண் 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002ன்படி அமைக்கப்பட வேண்டும். |
| 16 | வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம். |
| 17 | கட்டிடம் கட்டப்படும் இடத்தின் முன்புறம் கட்டிட உரிமையாளர் பெயர் கட்டிட அனுமதி எண், அனுமதி வழங்கிய தேதி அனுமதிக்கப்பட்டுள்ள காலம் அனுமதி நீடிப்பு காலம் கட்டிடம் கட்டும் ஒப்பந்ததாரர் பெயர் ஆகிய விபரங்களை வெள்ளை நிற எழுத்தால் எழுதி வைக்கப்பட வேண்டும். |
| 18 | அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிடங்களுக்கு / அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு மாநகராட்சி சட்டப்பிரிவு 283ன்படி அரையாண்டு ஒன்றுக்கு 100 சதுர அடிக்கு ரூ. 50 வீதம் வசூலிக்கப்படத்தக்கதாகும். |
| 19 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறுதான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மாறுதலாகவும், விதிகளுக்கு முரணாகவும் கட்டும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்க இயலாது. மேலும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 20 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதல் செய்ய அவசியம் எனில் அதற்காக திருத்திய வரைபடங்கள் அனுப்பி புது உத்திரவு பெற்ற பின்னரே கட்டிட வேலை ஆரம்பிக்க வேண்டும். இதில் தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்டப்பிரிவு 447ன்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் அல்லது மாநகராட்சி சட்டப்பிரிவு 296ன் படி மாநகராட்சி பணியாளர்களால் இடித்து தள்ளப்படும். |
| 21 | ஏற்கனவே உள்ள வீடுகள் மாற்றி கட்டுவதற்கு முன் மின் இணைப்புகள் இருப்பின் அதை அப்புறப்படுத்த வேண்டும். |
| 22 | கட்டிட சம்மந்தப்பட்ட கல், மண் முதலியவற்றை தெருவில் போடக்கூடாது. |
| 23 | கட்டிடப்பணி நடைபெறும் பொழுது பணி செய்யும் வேலையாட்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பாதுகாப்பு குறித்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மனுதாரர் சொந்த பொறுப்பில் மேற்கொள்ள வேண்டும். |
| 24 | கட்டுமானப் பொருட்கள் தரம், கட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு பணி மேறகொள்ளும் பொறியாளரும் கட்டிட உரிமையாளரும் பொறுப்பாவார்கள். |

சிறப்பு நிபந்தனைகள்

25. [illegible] துறை [illegible] சுகாதார மண்பரி சோதனைச் சான்று மற்றும் கட்டிட உறுதிச்சான்று ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்

26. மனையின் கிழக்குப்புறமுள்ள 6 மீட்டர் அகல சாலையை மட்டும் அணுகுமுறையாக கொண்டு கட்டிட அனுமதி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு – நகர் ஊரமைப்புத்துறை

65

அனுப்புநர்

திரு. கி.சண்முகம், எம்.இ., எம்.பி.ஏ.,
துணை இயக்குநர் (பொ)/உறுப்பினர் செயலர்,
கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
25/2, நேதாஜி ரோடு, ஒசூர் – 635 109.
Phone: 04344 – 222 563.
E-Mail: krishnagiri.district2020@gmail.com
Web: www.dtcp.in

பெறுநர்

ஆணையாளர்,
ஒசூர் மாநகராட்சி,
ஒசூர்.

ந.க.எண். 1538/2019/ஒபுநவகு

நாள் : 29.07.2020

ஐயா,

பொருள் : **TNHB – குடியிருப்பு கட்டிடம் – அண்டை குடியிருப்புத் திட்டம் – கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் – ஒசூர் வட்டம், ஒசூர் மாநகராட்சி – தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஒசூர் அண்டை குடியிருப்புத் திட்டம் எண். 03, ஒசூர் கிராமம் சர்வே எண்கள் 539/1pt, 2pt, 3pt, 4pt, ஆகியவற்றில் அமையவுள்ள Stilt + 5 தளங்களுடன் கூடிய 20 MIG Flats கட்டுமானத்திற்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49–ன்கீழ் திட்ட அனுமதி வழங்கியது – திருத்திய வரைபடம் அனுப்புதல் – தொடர்பாக.**

பார்வை :
1. **இவ்வலுவலக செயலாணை இதே எண், நாள் 06.07.2020.**
2. **ஆணையாளர் ஒசூர் மாநகராட்சி க.வி.எண் 356/2020எப்1, நாள் 17.07.2020.**
3. **செயற்பொறியாளர்/நிர்வாக அலுவலர் Lr.No. P1/1222/2019 நாள் 25.07.2020.**

*********

பார்வை **1–ல்** காணும் இவ்வலுவலக செயலாணையின் மூலம் ஒப்புதல் வழங்கியதை பார்வை **2–ல்** காணும் தங்களின் கடிதத்தில் நுழைவு பகுதியினை திருத்தியமைத்து வரைபடம் அனுப்பிவைக்க கோரியதனையடுத்து, ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்ட site plan மற்றும் stilt floor வரைபடத்திற்கு, க.வ.தி.அ.எண்.7A/2020, **7B/2020** என எண்ணிடப்பட்டு வழங்கப்பட்டதை திருத்தி அமைத்து புதியதாக க.வ.தி.அ.எண்.**7A1/2020** எனவும் **7B1/2020** எனவும் எண்ணிடப்பட்டு திருத்திய வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

29/7

துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர்,
கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு
அலுவலகம், ஒசூர்.

29/7/20

**இணைப்பு:** Site Plan – 2

**நகல்:**
செயற்பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
ஒசூர் வீட்டுவசதிப் பிரிவு, ஒசூர்.

30 JUL 2020